# தாய்நாட்டு அகதிகள்



மாரிமுத்து - சிவகுமாரன்

8418
[illegible]
SLIPR

# தாய் நாட்டு அகதிகள்

(கவிதைத் தொகுப்பு)

மாரிமுத்து யோகராஜன்

THAAI NAATU AGATHYKAL
(Poetry)

MARIMUTHU YOGARAJAN ©


| | |
|---|---|
| Copies | 1000 |
| Pages | 50 |
| First Edition | January 2000 |
| Published by | 'Vizuthukal'<br>Sagama Road, Akkaraipattu. -08<br>Sri Lanka. |
| Type Set | Super Com Computer & Tecnology<br>Main Street, Akkaraipattu. |
| Cover Design | Mr. S. Ravindran (I.S.A.- Art) |
| Printers | Selection Offset Printers,<br>Main Street, Akkaraipattu. |
| Price | Rs. 50.00 |




## 'தாய்நாட்டு அகதிகள்' நிலை பற்றி......
## – சில அவதானிப்புகள்.

ஈழத்தின் கிழக்கு மாகாண - குறிப்பாக ஓட்டமாவடி தொடக்கம் அக்கரைப்பற்று வரையான நவீன இலக்கிய வளர்ச்சி பற்றி அவதானிக்கு மொருவர் இப்பரந்த பிரதேசத்தில் இலக்கிய ரீதியான மூன்று குவிமையங்களை அவதானிக்க முடியும். அவை,(இலக்கிய வளர்ச்சி நிலையின் ஏறுமுக வரிசையாகக் கூறின்) மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசங்கள், ஓட்டமாவடி - வாழைச்சேனை பிரதேசங்கள், மருதமுனை தொடக்கம் அக்கரைப்பற்று வரையான பிரதேசங்கள் என்பனவாம். அவ்வப்பிரதேசங்களின் ஆரோக்கியமான வளர்ச்சியும் தளர்ச்சியும் அவ்வப்பிரதேச இலக்கிய அமைப்புகளையும் முன்னோடி களையும் சார்ந்தே செயற்பட்டு வந்துள்ளன; வருகின்றன. இம்மூன்று குவிமையங் களுள் வயல் வளத்தில் மட்டுமன்றி இலக்கிய வளத்திலும் முன்நிற்கும் அக்கரைப் பற்றுப் பிரதேசஞ் சார்ந்தவரே இத்தொகுப்பிற்குரிய கவிஞரும். ஆழ்ந்து அவதானிக்கும் போது இன்றைய சமகாலப்பிரச்சினைகளும் இயற்கையும் காதலும் பற்றியதாகவே இத்தொகுப்பிலுள்ள பெருமளவு படைப்புக்கள் அமைந்திருக்கக்காணலாம்.

சமகாலப்பிரச்சினைகளுள் குறிப்பாகத் தொண்ணூறுகளின் பின்னரான அரசியல் நெருக்கடி காரணமாக ஏற்பட்ட தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வுகளும் அகதிநிலைவாழ்வுமே முதன்மைபெற்றுள்ளன. இத்தொகுப்பிலுள்ள குறிப்பிடத்தக்க கவிதைகளாகவும் (எ-டு; அகதிகள், ஒரு கல்லறைக் குரல் பறிபோன தேகங் களும்........... இங்கும்......... ஆட்டு லொறி, கொலைறா) இவையே உள்ளன. இவை சிலவற்றிலே கவிதா உணர்வு தீவிரமாகவும், இயல்பாகவும் கவிதைக்குரிய செறிவுடனும் வெளிப்படுகின்றன:

எ-டு; *"நாங்கள்*
*கேட்பதெல்லாம்*
*கிடுகும் மூங்கிலும்*; - *'அகதிகள்'*

இவ்வுணர்வு வேறு சில கவிதைகளில் அதிர்ச்சியூட்டும் முறையில் இடம் பெறுகின்றன;

*"தாய்க்குத்*
*தலைப்பிரசவம்.*
*ஆஸ்பத்திரியும்.*
*அம்புலன்சும்*
*இங்கில்லை.*

மரத்துக்குக்
கீழே
குந்தியிருந்து
கலங்கினான்
கணவன்!
மருத்து விச்சி
வெளியே வந்தாள்
"ஒரு 'துவக்கு'ப்
பிறந்திருக்கு"
அதிசயமாக
உள்ளே
நுழைந்தான்.
உண்மையாகவே
ஒரு துவக்கு!
பெரு மூச்சு
விட்டான்.
'பிள்ளை வயிற்றுக்காரி
அடிக்கடி
எதனைப்
பார்க்கின்றாளோ
அப்படியே
பிள்ளை பிறக்கும்'
எங்கோ
வாசித்த ஞாபகம்" - 'ஆயுதக் குழந்தை'

தவிர, இத்தகைய கவிதைகளினூடு யதார்த்தம் எவ்வித அலங்காரமுமின்றி இயல்பாக வெளிப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக 'ஆட்டு லொறி' என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

இன்னுமொன்றையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்; தாய்நாட்டு அகதிகள் பற்றி கவிஞர் சிலர் அவ்வப்போது கவிதைகள் எழுதியிருப்பினும், இவ்விடயம் பற்றி அதிகம் பேசும் கவிதைத்தொகுப்பு இதுவென்றே கூறத்தோன்றுகின்றது.

பெண்களின் வாழ்நிலை பற்றியதொரு கவிதையும் இத்தொகுப்பிலுள்ள குறிப்பிடத்தக்க படைப்புகளுளொன்றாகும்.



"..........................
என்னையும்
பல வருடங்களாக
இறைச்சி போட்டு
வளர்க்கிறாய்.
கட்டாயம்
என்னை
இறைச்சிக் கடைக்கு
கொடுக்க -
மாட்டாயென்று
தெரியுமம்மா!
ஆனாலும்
தினம் தினம் தரகர் வந்து போகும்
சங்கதி
என்னம்மா?
நிறுக்காமலேயே
விலை பேசுகிறாயே
என்னை அறுக்காமல்
இன்னொரு வீட்டில்
வளர்க்கவா? "- 'விலை'

தவிர இயற்கை பற்றியும் காதல் பற்றியுமான இத்தொகுப்பிலுள்ள படைப்புகள் பலவும் துணுக்குகளாகவேயுள்ளன. கவிதைகள் 'துணுக்காளாக இடம்பெறக் கூடாது என்பதல்ல' இவ்வாறு எழுதப்படுவனவற்றுள் பல, உணர்ச்சித்தளத்தில் அமையாமல் புலமைத்தளத்தில் அமைந்து விடுவதுதான் தவறு. இத்தகைய பாணியிலான படைப்புகள் ஈழத்திலே புதுக்கவிதை பரவலாக வேருன்றத் தொடங்கிய எழுபதுகளில் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆயினும் இன்றும் வெகுசனப் பத்திரிகைகளில் இத்தகைய வடிவிலான படைப்புகள் இடவசதி காரணமாகப் பெருமளவு வெளிவருகின்றன. இத்தொகுப்பிலுள்ள கணிசமான படைப்புகளும் தினசரிப் பத்திரிகைகளைப் பிரசுரக்களமாகக் கொண்டு வெளிவந்தமை காரணமாகவே இத்தகைய வடிவில் 'உற்பத்தி' யாகியிருக்க வேண்டும்! அது எவ்வாறாயினும் இவற்றுள் கணிசமானவை கவிதா உணர்வினைத் தொற்றச் செய்வதில் தோல்வி கண்டுள்ளன என்பது ஜீரணிக்க வேண்டிய உண்மையும் வருங்கால ஆரோக்கியமான வளர்ச்சிக்கான நிவாரணமும் ஆகின்றன என்பதனை அழுத்தியுரைக்க விரும்புகின்றேன்.

அது மட்டுமன்றி நுணுகி நோக்கும் போது இத்தகு படைப்புக்கள் பல ஒரே பாணியில் வெளிப்படுவது புலனாகின்றது. தவிர, ஒரே விடயங்களும் அடிக்கடி வருகின்றன (எ-டு; தாடி, கிரகணம்.....).

ஆக, இத்தொகுப்பினை வாசித்து முடிந்தவுடன் இக் கவிஞரிடம் இரு வேறுபட்ட - முரணான - கவிதா ஆளுமைகள் குடிகொண்டிருப்பதனை என்னால் இனங்காண முடிகின்றது. முறையே, சமகாலப்பிரச்சினைகள் பற்றிப்பேசும் போதும் (முற்குறிப்பிட்ட கவிதைகள்) இயற்கைபற்றிப் பேசும் போதும் அவை துலக்கமுறுகின்றன.

ஆகவே, இயல்பாகவே கவிதா ஆளுமை பெற்றுள்ள இக்கவிஞன் மேற்சுட்டிய குறைகளிலிருந்து விடுபட விரும்பவேண்டும். அத்துடன் கவிதைகளின் மொழி; மொழிக்குப் பின்னாலான மௌனம், மொழியின் நளினம், மொழிச் செறிவு என்பனபற்றியும் கவிஞர் நன்கு சிந்திக்கவேண்டும். ஆயினும் இக்கவிஞனின் உள்ளே சிறந்ததொரு கவிஞன் குடியிருக்கின்றான் என்பதையும் அதற்கு இத்தொகுப்பிலுள்ள ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட படைப்புகளே சான்றாகின்றன என்பதையும் அக்கவிஞன் ஆரோக்கியமாக வளரவேண்டும் என்பதையும் இறுதியாகக் கூற விரும்புகின்றேன்.

**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**வந்தாறு மூலை**
25- 09 - 99

**வாழ்த்துக்களுடன்,**
**செ. யோகராசா**



# அகதிகள்

நாங்கள்
வெண்புறாக்களின்
வளர்ப்புக்
குழந்தைகள்!

இடம் பெயர்ந்தவர்கள்
எனும்
கௌரவப்
பெயருக்குரியவர்கள்!

நாளை
என்ன நடக்கும்
என்பதில்
நம்பிக்கை யில்லை!

நாங்கள்
கேட்பதெல்லாம்
கிடுகும் மூங்கிலுமே!

இழப்பதற்கு
ஒன்றுமில்லை
என்ற
இறுதித் தீர்மானத்துடன்
உயிருடன்
உலாவும்
நடைப்பிணங்கள் !
எயிட்சைப் போல்
எங்கள் இனம்
வெகுவேகமாக
பரவி வருகின்றது.

எங்கள்
கிளை அமைப்புக்களை
ஒவ்வொரு நாட்டிலும்
நிறுவியுள்ளோம்.

உலகளாவிய
ரீதியில்
பதிவு செய்யப்பட்டதும்
எமது சங்கமேதான் !

உயிர்கள்
விளையாட்டுப்
பொருட்களானதால்
உறவுகள்
துண்டிக்கப்பட்ட
கண்ணகிகள்.

ஆனால்
மாண்ட
கணவன் மாரை
மீண்டும்
எழுப்ப முடியாத
விதவைகள்!

போர்ப் பசிகள்
புசிப்பதற்காகவே
வளர்க்கப்படுகிறோம் !
நாங்கள்
அறுக்கப்படும் போது
நிறுக்கப்படுவதில்லை
ஆள்க்கணக்கில்
சிலவேளை
போடுகாய்களாகவும்
பறிக்கப்படுவதுமுண்டு !

நாங்கள் காணும்
பகல் கனவு
சமாதானம் !

இறுதி ஆசை
நிம்மதி !

கடைசியாக
அறிய விரும்புவது
எங்கள்
உடன் பிறப்புக்கள்
எரிக்கப்பட்டார்களா ?
அல்லது
உயிருடன்
போட்டுப்
புதைக்கப்பட்டார்களா ?
என்பதை !

(மருதநிலா – 1996)



# ஒரு கல்லறைக் குரல்

ஒரு தேசத்தின்
விடுதலைக்காய்
ஒரு தசாப்த
காலத்தின் முன்
புதைக்கப்பட்ட
புதை குழியிது.

உயிர்
பிரிவதுண்டு,
பிரிவதைப் பார்த்ததில்லை.
என்
உயிர் பிரிவதை
நானே பார்த்தேன்.

அப்போது,.....
நானும் கூட
ஒரு சிலுவையற்ற
யேசு.

என்னிரு
கைகளாலே
குழி தோண்டினேன்
'வொறு கியண்ட எப்பா'
தேவாரம்
இறுதிக்குரலாகப்
பாடப்பட்டது.
"உத்தோ ஓயாட்ட
றட்ட ஓணத ?" ([illegible])

என் மேலும்
பல உடல்கள்
விறகுகள் போல்
அடுக்கப்பட்டது.

ஓ,.....
அவர்களுக்கு
குழியை மூடக்கூட
நேரமிருக்கவில்லை.
ஒருவேளை
குழி ஏற்கனவே
நிறைந்திருக்கலாம்.

என் வயது வந்த
தம்பிகள் இருவரும்
வயது முதிர்ந்த
தாய் தந்தையும்
அப்போதைய
'அகதி முகாமில்'
இருந்தனர்.
அதுவும் கூட
'நலன்புரி நிலையங்கள்'
என
இப்போது
பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்

ஆம்,....
இங்கு கொஞ்சம்
எனக்குச்
சுதந்திரந்தான்.
இருட்டைக்
காண்கின்றேன்,
ரசிக்கின்றேன்.

அடையாள அட்டையும்
கையுமாகத்
திரியத் தேவையில்லை !
தொழில் இல்லாமலேயே
வதை முகாம்களில்
கையொப்பமிடவும்
தேவையில்லை !

பெற்றோரை
நினைத்தால்தான்
பெரும் வேதனை.
"புலிக்குடும்பம்" என
முத்திரை குத்தி
வீட்டுடன் போட்டு
எரித்தவர்களாம்.

சுதந்திரத்தை
வேண்டிய
கைகளுக்கு
விலங்குகளையும்
குரல் கொடுத்த
வாய்களுக்கு
ரத்தக் கோப்பைகளையுமே
அவர்களால்
தர முடிந்தது.

இருந்தாலும்
ஒரு சின்ன நிம்மதி,
என் பின்
வந்தவர்களுக்கு
கல்லறைகள் கூட
இருக்கவில்லை.
காக்கைகளுக்கு
உணவாகிப் போனதால்.

(கலைச்செல்வி – 1998)



# நட்சத்திரங்கள்.

தீபாவளி
இன்னும்
தொடங்கவில்லையே!
ஏன் இப்போதே
விளக்கு
வைத்தீர்கள்?

உங்களுக்கும்
'பவர்கட்டா?'
சந்திர
சர்வாதிகாரியுடன்
சுயாட்சி கேட்டுப்
பிரிந்தவர்களா?
ஏன்
உங்கள்
மாநிலங்களுக்குள்
இன்னும்
உடன்பாடு
வரவில்லையா?

மதியழகியை
யாரும்
அத்து மீறித்
தொட்டுவிடுவார்கள்
என்று
கண்விழித்துக்
காவல்
காக்கிறீர்களா?

எம்மைப் போல்
புகலிடமில்லாது
புலம்
பெயர்ந்தவர்களா?

எங்களைப்
பார்த்துக்.
கண்ணடிப்பதும்
காதல்
ஜெயிக்காமல்
தரையில் விழுந்து
தற்கொலை
செய்வதும் தான்
உங்களது
கொள்கையா?

உங்கள் தாய்க்கு
எத்தனை
செய்மதித் தூதுகள்
அனுப்பியும்
நீங்கள்
இன்னும்
வயதுக்கு
வரவில்லையென்று
அடித்துச் சொல்கிறார்!

சூரியத் தந்தையும்
உங்கள் அம்மாவை
விவாகரத்துச்
செய்துவிட்டு
உங்களுக்குச்
செலவு கட்டுகிறாராம்!

கள்ளத் தனமாய்க்
கிரகண நேரம்
சந்திப்பதாகவும்
பூமி ஒற்றன்
வதந்தி
பரப்புகிறான்!

(தினகரன் – 19960728)

# இறப்பு!

நீயும்
ஒரு நாள்
இறப்பாய்.
எட்டு,
முப்பத்தொன்று
என்று
நாள்கள்
நகரும்!
உன்னைப் பற்றிய
நினைவுகளும்
அகலும்!
காலச் சலவையில்
நீயும் ஒரு
அழுக்குத் துணி
என்பது
சமர்ப்பணமாகும்!

(வீரகேசரி – 19960526)

# பைத்தியக்காரன்!

இந்த
அகதி
யுகத்தின்
சுதந்திரப்
பறவை!

(வீரகேசரி – 19951112)

# சூரியன்!

விற்றமின் - டீ
வழங்கும்
வைத்தியர்!

திருடரை
தேடும்
டோச் லைற்!

வானச்
சட்டியை வைத்து
மேக நீரைச்
சூடாக்கும்
அடுப்பு!

பருவமடைந்து
பல்லாண்டுகள்
சென்றும்
தனிமையில்
வாடும்
கட்டப் பிரமச்சாரி!

(வீரகேசரி – 19961027)

# குயில்!

இத்தனை
வருட
பாடல்
அனுபவமிருந்தும்
மேடைக்கச்சேரி
எதற்கும்
அழைக்கப்படாத
தெருப்பாடகன்.

(வீரகேசரி – 19960225)



# என் காதலி!

உன்னை
நான்
உயிரிலும் மேலாக
நேசிக்கின்றேன்!
அது ஒன்றும்
கட்டாயமல்ல
காலத்தின்
நிர்ப்பந்தத்தால்.
தினமும்
உன்னைத்
தொட்டுப்
பார்ப்பேன்.
நீ பிரிந்தால்
என் உயிரும்
பிரியும்.
நீ தான்
நான்
இன்றும் என்றும்
நேசிக்கும்
அடையாள அட்டை!

(வீரகேசரி – 19960303)

# பனித்துளி!

காலையில்
பூக்கள்
முகம் பார்க்கும்
கண்ணாடி!

(வீரகேசரி – 19951224)

# யுத்தம்

சமாதானப்
பூங்காவை
சிதைத்துச்
செல்லும்
சூறாவளி!
மரணக்காய்களை
நகர்த்தி
விளையாடும்
சூதாட்டம்!
விஞ்ஞான
கண்டுபிடிப்புக்களின்
பக்க விளைவு!
ஒரு நாள்
பூச்சியமாகும்
கணக்கு வழக்கு!

(வீரகேசரி – 19951008)

# அலைகள்!

இன்னும்
கடலைக்
கழுவி
முடிக்காத
சலவைக்காரர்கள்!

(வீரகேசரி – 19951203)

## ஓர் உதவி...

உன் கண்களில்
கைதாகி
இமைக்கதவுகளுள்
காவலிருந்தேன்.
இன்றைய
நிலைபோல்
விசாரணையின்றி
விளக்க மறியலில்
இருந்தேன்.
என்னைத்
தேடித்தேடி
இப்போது
காணாமல்
போனவர்கள்
பட்டியலில்
போட்டிருக்கின்றார்கள்
என் வீட்டார்.
முடிந்தால்
ஒரு
தகவலனுப்பு
என்னை
ஏற்கனவே
கொன்று விட்டாயென்று.

**(மித்திரன் – 19960107)**

## அமாவாசை!

சம்பள
உயர்வு கேட்டு
நிலவும்
வேலை நிறுத்தம்!

**(வீரகேசரி – 19951112)**

## வெண்புறாவே!

மலிவாகக்
கிடைக்கும்
மனித உயிர்கள்
மடியும் போது
வெண்புறாக்களுக்கு
இங்கு
என்ன வேலை?
எங்களைச்
சுற்றிப்
பருந்துக் கூட்டம்
வட்டமிடும் போது
நீ
இரையாகாதே!
மனிதர்கள்
எல்லாம்
மரித்த பின்னர்
இறுதியாக
வா!
மனிதப்
பிணம் தின்ன!

**(வீரகேசரி – 19960225)**

## கல்லறை!

விதைக்கப்பட்ட
மனித விதையின்
பெயர்,
திகதி,
இனம்,
போன்ற
தகவல்கள்
பொறிக்கப்பட்ட
விவசாயப்
பதிவேடு!

**(வீரகேசரி – 19960310)**



## வெண்புறா!

இந்த
அகதியுகத்தில்
நீ மட்டும் ஏன்
நிம்மதி
தேடுகின்றாய்?
எனக்குக்
கறியாகு!
ஒரு வேளைப்
பசியாற!

**(வீரகேசரி – 19950402)**

## இயலாமை.

நிலவை
மேகம்
துரத்திப் போகிறது.
நான்
உன்னை
பின் தொடர்வதைப் போல்.
இறுதியில்
முடியாமல்
என்னைப் போல்
மழைத் துளிகளாக
அழுகின்றது!

**(வீரகேசரி – 19950312)**

## பகைகள்.

என்
திருமணத்திற்கு
பணம்
மட்டும் தான்
பகை
என்றிருந்தேன்!
இப்போது
செவ்வாயுமாம்...!

**(வீரகேசரி – 19950625)**

## தாடி!

காதல்
தோல்வி
விதையால்
முளைத்த
காடுகள்!

**(வீரகேசரி – 1995)**

## பிறந்த நாள்!

இறக்கும்
இலக்கை
எட்டும்
ஓராண்டு!

**(வீரகேசரி – 19960908)**

## ஒட்டாதே!

காதலியே
இனி
அனுப்பும்
கடிதங்களுக்கு
தபால் தலை
ஒட்டாதே!
உன் இதயம்
சுமந்து வரும்
கடிதங்களில்
அவர்கள்
ஓங்கிக்
குத்துவதைத்
தாங்க
முடியவில்லை.

**(வீரகேசரி – 19950625)**

## காதல் வந்தால்...

பெண்ணில்
காதல்
கொண்டால்
அவள்
பாதம்பட்ட
மண்
கோயில்!
அவள் வீட்டு
நாய் கூடத்
தெய்வம்!

**(வீரகேசரி – 19950827)**

## சூரியன் !

விடியற்
காலையிலே
அவள் வாசலில்
வந்து நின்று
தினந்தினம்
அவனை
விரும்பாத
பெண்ணைச்
சைற்றடிக்கும்
பொறுக்கி!

**(வீரகேசரி – 19950924)**

## இலவச வேளாண்மை நாற்றுக்கள்

விவசாயிகளின்
வியர்வைத்
துளிகள்!

**(வீரகேசரி – 19950507)**

## கண்கள்!

வயரற்ற
'செல்ட்டல்'
தெலை
பேசிகள்!

**(வீரகேசரி – 19950716)**



## காலைக்காட்சி.

கண்ணை
விழித்தேன்
கதவு தட்டும்
சத்தம்.
திறந்து
பார்த்தேன்!
கட்டையாய்
நெட்டையாய்
உருவங்கள்.
கனவோ என
நினைத்தேன்.
'நட கேம்புக்கு'
என்றது!

**(வீரகேசரி – 19951119)**

## கிரகணம்!

பல
வருடங்களின் பின்
தனது
சூரியக் காதலனை
நேருக்கு நேர்
பூமிக்காதலி
சந்தித்த நாள்.

**(வீரகேசரி – 19960218)**

## தாடி!

முகத்தில்
முளைத்த
கறுப்பு
வேளாண்மை!

**(வீரகேசரி – 19950318)**

## வானவில்!

சூரிய
திருமணத்திற்குக்
கட்டிய
தோரணத்
துண்டில்
ஒன்று!

**(வீரகேசரி – 19970119)**

## முத்தம்!

மனித
இனத்தின்
சர்வதேசத்
தாய்மொழி.

**(வரகேசரி – 19950910)**

## நட்சத்திரங்கள்!

நிலவுப்
பெண்ணுக்கு
இத்தனை பேர்
காவலா?

**(மித்திரன் – 19951210)**

## கவிஞருக்கு.

உயிருடன்
உள்ள போது
பிழைக்கத்
தெரியாதவன்,
புறம் போக்கு
எனும்
'கௌரவப்'
பட்டங்கள்!
இறந்த பின்பு
மகாகவி,
கவியரசு
எனும்
'சிறப்புப்'
பட்டங்கள்!

**(வீரகேசரி – 19960225)**

## செய்திகள்!

பூலோகச்
செய்திகள்
வாசிப்பவர்
சமாதான விரோதி.
பயங்கர வாத
யுத்தத்தால்
பொது மக்கள்
பலர்
பலியானார்கள்.
இதனைச்
சிறப்பிக்குமுகமாக
மேலதிக
ஆயுதங்கள்
கொள்வனவு
செய்யப்பட்டன.

**(வீரகேசரி – 19960121)**

## அகதிகள்!

சர்வதேச
விளையாட்டுப்
பொருட்களில்
ஒன்று!

**(வீரகேசரி – 19951010)**

## மழை.

மனிதனைப்
பார்த்து
மேகங்கள்
காறித்துப்பிய
எச்சில்!

**(வீரகேசரி – 19951119)**



## இங்கும்.....

இங்குமொரு
சோமாலியாவும்
சேபியாவும்
உருவாக
வேண்டுமென்று
தவம் கிடக்கின்றனர்.
இவர்களைச் சுற்றிப்
பிணங்கள் கிடக்கின்றன.
பிள்ளைக்குப்
பாலில்லை,
பெரியவர்க்குப்
புரதமில்லை.
இருண்ட
இடமெல்லாம்
சுருண்ட பிணங்கள்.

**(மித்திரன் – 19930704)**

## பனித்துளி......

துழாயில்
நீர்த்
தட்டுப்பாடாம்.
அதுதான்
புற்கள்
காலையிலேயே
தளிர்களில்
சேமித்து
வைத்துள்ளன.

**(வீரகேசரி – 19941113)**

## கைரேகை

கையை
அடிக்கடி
பார்ப்பேன்.
கலியாணம்
எப்பவென்றல்ல
கல்வி எப்படியென்று.
ரேகையின் படி
பட்டமும்
கிடைத்தது.
ஆனால் அதை
விட்டத்தில்
சொருக வேண்டியதாயிற்று.
மண்வெட்டி
பிடித்துப் பிடித்து
மிகுதி இருந்த
ரேகையும்
அழிந்து விட்டது.

**(மித்திரன் – 19931010)**

## கடல்!

பூமிப்
பெண்ணைத்
தினம்
விழுங்க வரும்
பூதம்!

**(மித்திரன் – 19960310)**

## என்னைப் போல் சூரியனும்.

என்னைப் போல்
சூரியனுந்தான் தனது
காதலியைப் பார்க்கத்
தினந்தினம் பகலில்
உலாவந்து இரவில்
தூங்கி விடுகிறது!

**(வீரகேசரி – 1995026)**

## விதவைக் கோலம்?

மலர்தனிலும்
விதவைகள்...
மல்லிகைப் பூ!

**(வீரகேசரி – 19950521)**

## விலை.

தோட்டத்தில்
ஊட்டி வளர்த்த
எமது ஆட்டை
நேற்று
அம்மா நீ
நிறுத்து விற்றாய்
இடைக்கு இடை
விலை கிடைத்தது.

என்னையும்
பல வருடங்களாக
இறைச்சி போட்டு
வளர்க்கின்றாய்.
கட்டாயம்
என்னை
இறைச்சிக்கடைக்குக்
கொடுக்க-
மாட்டாயென்று
தெரியுமம்மா!

ஆனாலும் ......
தினம் தினம்
தரகர் வந்து போகும்
சங்கதி
என்னம்மா?

நிறுக்காமலேயே
விலை பேசுகிறாயே
என்னை அறுக்காமல்
இன்னொரு வீட்டில்
வளர்க்கவா?

**(வீரகேசரி – 19950423)**



## பேய்க் குருவி!

ஙூ ஙூ.....
சத்தத்துடன்
விரைந்து
போகும்!
நல்லகாலம்
தலைக்கு
வந்தது
தலைப்பாகையுடன்
போனதே என்று
மனம்
சமாதனம்
சொல்லும்!

ஊளையிட்ட
நாய்கள் கூட
உணர்விழக்கும்!

காலையில்
பச்சை மரங்களும்
வீட்டுச் சுவர்களும்
சொல்லும்
இரவு நடந்து
என்னவென்று!

ஒவ்வொரு இரவும்
பிரசவமாகக்
கழியும்!

பகலுக்கென்ன
தெரியும்?
அது
பகலில் வந்து
போகிறது!

இரவுக்கும்
எமக்குந்தான்
தெரியும்...
இரவு நடந்தது
என்னவென்று...!

**(வீரகேசரி – 19961103)**

## மின் கம்பங்கள்!

வீதியால்
செல்லும்
வாகனங்களுக்கு
வரவேற்புத்
தோரணங்கள்!

(வீரகேசரி – 19950716)

## சமாதானம்.

இவரைக்
காணவில்லை.
ஐக்கிய நாடுகள்
சபையாலையே
தேடப்படும்
ஒரு சர்வதேச
பயங்கரவாதி இவர்.
உயிருடனோ
பிணமாகவோ
பிடித்துத்
தருபவருக்கு
கேட்கப்படும்
சன்மானம்
வழங்கப்படும்.
இவர்
அகதி முகாம்களில்
தங்கியிருப்பதாகத்
தகவல்
கிடைத்துள்ளது.
பலரின் கைகளில்
பலமுறை சிக்கி
தப்பியவர்.
கடைசியாகக்
கண்ட போது
வெள்ளை
ஆடை
அணிந்திருந்தார்.
இவரது
வலது கண்ணும்
இடது காலும்
ஊனமடைந்திருந்தது.

(வீரகேசரி – 19951210)



## ஓட்டோ!

நாலுகால்
விலங்குகளுள்
ஓடும்
மூன்றுகால்
ஐந்து!

(வீரகேசரி –19960310)

## பூக்கள்!

சூரியக்
காதலனை
தினம்
எதிர்பார்க்கும்
இளசுகள்!

(விரகேசரி – 19961110)

## தாழி!

காதலிக்கு
நேர்த்தி
கட்டிய
கறுப்புச்
சீலை முடிச்சு!

(வீரகேசரி – 19960512)

## சிகரெட்!

ஆயுள்
புகை
அடைக்கப்பட்ட
மரணக்
கோல்!

தன்னைத்
தொட்டவனைக்
கொல்லும்
ஒருவகை
எயிட்ஸ்!

உன்
மரணத்திற்கு
தினம்
வாயில் குத்தும்
வெள்ளைக் கொடி!

இழுத்து
இழுத்து
ஊதும் புகையில்
ஆரோக்கியம்
ஆவியாய்ப் பறக்கும்.

வாயில்
தீமூட்டி
நுரையீரலை
வேக வைத்து
ஆண்டமுது
நடக்கும்!

(தினகரன் – 19961110)

## ஆயுதங்கள்!

இரும்பு
வடிவிலான
எமதர்ம
ராஜாக்கள்!

**(வீரகேசரி – 19960225)**

## நட்சத்திரங்கள்!

நிலவுப்
பெண்ணுக்கு
இத்தனை பேர்
காவலா?

**(மித்திரன் – 19951210)**

## காகமும்
## புழுத்த பிணமும்!

இரைப்பைப் பாரத்தால்
இப்போதெல்லாம்
இறக்கை தூக்கிப்
பறக்க முடியாது
எமக்கு!

கழுகு அக்கா
கண்களைக்
கொத்தியிழுக்க
நரித்தம்பி
குடலைப்
பிய்த்துக் குதறி
இழுத்துச் செல்லும்!

வம்மிப் பூப் போல
புழுக்கள்,
நெளியும்!

சமாதானத்தை
வாயிலும்
ஜனநாயகத்தை
நெஞ்சிலும் சுமந்து
திரிந்த மனிதர்
இவர் என்று
சவக்குவியலில்
குந்தியிருந்த
ஆந்தை
சொல்லியது!

**(தினகரன் – 19961006)**



## ஐ(ஐ)ந்துகளின்
## காலம்!

நட்சத்திரங்கள்
உதிர்ந்து
விழுந்திருந்தது!
அப்போது கூட
அந்தப்
பனங்காட்டு நாய்
எழும்ப வில்லை!

இறைச்சி மலிந்து
..ரல் தின்னும் காலம்!

"தண்ணியைப்
போலில்லை"
"இது உடனே
உறைந்து விடும்"
என்று
இன்னொரு நாய்
புறுபுறுத்துப்
போனது!

சூழல் மாசடைவதற்கு
இதுவுமொரு காரணம்
என்று
பிணங்களை
பார்த்துக்
கழுகொன்று
சொல்லிப்போனது!

முற்றத்தில்
தேங்காய்
விழுந்தது போல்
காகத்தின்
வாயிலிருந்து
மண்டையோடு
ஒன்று
தவறிவிழுந்தது.

விராலில்லாக்
குளத்திற்குக்
குறட்டை
அதிகாரியாம்
என்று
நரியொன்று
ஊளையிட்டது.

**(தினகரன் – 19960929)**

# செல்.., விழு..., வா!

இரத்தம்குடிக்க
நுளம்பிடமும்,
பிணம் தின்னக்
கழுகிடமுமா
கற்றுக்கொள்வது?

விஞ்ஞானம்
ஏறு வரிசையிலும்
'மனிதம்'
இறங்கு வரிசையிலுமா
இயங்குகிறது ?

மிருகத்தனங்கள்
கற்பதற்காகவா
விண்கலப்
பரிசோதனைகள்?

பூலோகத்தையன்றிப்
புதைகுழிகளையா
வெற்றிகொள்வது?
இரைப்பைகளில்
இறப்புக்கள் தானா
சமிபாடடைவது?

உன் வெறி,
ஆவேசம்,
திமிர்
அடங்கும் வரை
கொல்,...!
பின் செல்
இன்னும்
செல்..., (வாங்கிவர)!!

(தினமுரசு – 19961110)

# இரவு.

சூரியன்
முகத்தில்
அப்பியிருந்த
இரத்தக் கறையைத்
துடைத்து
தொழிலுக்கு
எழுந்தான்!

இன்று
இரவு திண்டது
இத்தனை
பிணங்களா?

நம்பவே
முடியவில்லை!
கை
காலாகவும்
தலை
வாலாகவும்
சிதறிக்கிடந்தது!

அன்றிரவு
சந்திரன் கூட
அமாவாசைப்
போர்வையால்
முகத்தை
மூடியிருந்தான்!

எறும்புகளுக்காக
வீதியெங்கும்
இரத்தப்
பாயாசங்கள்
காய்ச்சப்பட்டிருந்தன!

(விரகேசரி – 19961124)



# மழை!

மழைக்கு ஏன்
கறுப்புக் கொடிகள்?

மழை உன்
எதிரியா?

நீ
பிடிக்க வேண்டியவை
குண்டு துழைக்காத
கேடயங்கள்
தானே...?

மழைத்துளி
உன் மேல்
விழுந்தால்
நீ ஒன்றும்
செத்துவிடமாட்டாய்!

இனி மேலாவது
குடை பிடிப்பதை
நிறுத்து!
அது பழங்காலத்தவர்
பாவித்த பொருள்!

நீ இப்போது
புது மனிதன்!
புத்தி சாதுர்யம்
நிறைந்தவன்!

நவீன கால
(குண்டு) மழைக்கு
குடை பிடி!
இதில்
நனைந்தால்
தலை துவட்ட
முடியாது!
கண்கள்
இரண்டும்
நாக்கும்
பூமியை
நோக்கும்!

(தினமுரசு – 19970105)

## சூரியக் குட்டி.

வேருக்க
விறுவிறுக்க
மேகங்கள்
அங்குமிங்கும்
ஓடித்திரிந்தன!

சூரியன்
குட்டிபோடுமா?

குட்டி
போட்டதைக்
கண்டவர்களும்
அனுபவித்தவர்களும்
சொன்னார்கள்!

எனவே,
சூரியன்
குட்டி போடுவது
உண்மை!

வழமையான
அகதி (க்)
கொட்டில்கள்
அடுக்கடுக்காய்
மாட்டு (த்)
தொழுவங்கள் போல்
அமைந்திருந்தன!

தூரத்திலிருந்து
மெல்லமாக
ஒரு சத்தம்!
பின்பு செவிப்பறை
வெடிக்க
ஒரு சத்தமும் அதிர்வம்!

சூரியன்
குட்டி
போட்டுவிட்டது!

எல்(லே) லா(ரு)ம்
இறந்தே
பிறந்தன (ர்) . . . !

(தினமுரசு – 19970601)



## ஓர் ஆயிரம் நிலவு . . .

கிராமப்
புறம் போல்
அது ஒரு
'அகதிப்புறம்'

நாலுகால்
உள்ளவைக்கும்
இவர்களுக்கும்
வால் மட்டும் தான்
வித்தியாசம்.

வீடு
மாட்டுக் கொட்டில்!
உணவு
தவிடு!
சில வேளை
அகதி நிவாரணப்
புண்ணாக்குகளும்
கிடைப்பதுண்டு.

காய்ந்து போன
மரங்களில்
குழந்தைகள்
படுத்துறங்கும்.

சில வேளை
நாளைப் பொழுது
விடியாதிருக்கலாம்.
இரவுகளில்
ஏவப்படும்
செல்கள்
எம் மீது விழுந்தால்!

பூரணை தினத்தில்
வானத்தில்
ஒரு நிலவு . . .
'என் குடிலுக்குள்'
ஓர் ஆயிரம்
நிலவு . . .

(தினமுரசு – 19970427)

## காத்திருக்கும் சிலுவைகள்!

பூட்ஸ்
காலோசையின்
பூபாளம்
பொழுதைப்
புலரவைக்கும்!

ஏன் விழந்தது?
இன்(று)னும்
வேதாளம்
முருங்கை
மரத்தில் தான்!

கால் விரலிடுக்கில்
தன்
முழுப்பலத்தையும்
பிரயோகித்து
எறும்பொன்று
மல்லுக்கு நின்றது.

அதன்
சுதந்திரமான
சுறுசுறுப்பைக்
கண்டு
மனம்
பேதலித்தது!
அளவில் சிறிய
உயிரானாலும்
அந்தஸ்தில்
உயர்ந்தது!

இன்னும் நாம்
ஒரு 'யேசுவின்'
பிறப்பிற்காய்
ஏங்கும்
'சிலுவைகள்' தனா...???

(தினமுரசு – 19970420)



## ஒரு துவக்கு வேணும்!

யுத்தம்
உணவானதால்
வெடி மருந்து
மலம்
கழிக்க
வேண்டியதாயிற்று.
புளித்து விட்ட
கிரிக்கெட்டும்
சலித்து விட்ட
போரும் போல.

மூச்சு விடுவது கூட
மெசின் கண்ணின்
துவாரங்களினூடே
என்றாகி விட்டது!

செவ்வாய்க்
கிரகத்திலும்
ஆயுதக் கடைதான்
முதற் கடை என
முடிவாகி விட்டது!

எங்கள் வீட்டுக்கும்
ஒரு துவக்குத்
தாருங்கள்!
இந்தச்
சின்னப் பயல்
சொல்லுக்
கேட்கிறானில்லை;
சுட்டுத்தான்
பயங்காட்ட
வேண்டும்!

(தினமுரசு – 19970824)

## மனிதன்.

அழிந்து போன
'டைனோசர்'
இனம் போல
நீயும்
மாறப் போகிறாய்!

அதற்கு
பாறைகளின்
படை இடுக்குகளில்
முட்டைகளாவது
உண்டு...
இனத்தை
உருவாக்க!

உன்னைத் தேடி
தொல் பொருள்
ஆய்வு செய்தால்
துப்பாக்கி
ரவைகளையும்
தலையற்ற
எலும்புக்
கூடுகளையும் தான்
குரங்குகள்
எடுக்கும்!

சில வேளை
உன் கருவை
குரங்கின்
கருப்பையில்
வளர்த்தெடுத்தாலும்
பாய்ந்தே -
திரிவாய்.
உன்
சந்ததியைப் போல,...

(தினமுரசு – 19961201)

## சுட்டுப் போடு....!

உடுப்பைப் போல்
முறுக்கிப் பிழி
அப்போது சொட்டும்!

ஒரு இருட்டறைக்குள்
முக மூடிக்குள்
விட்டுப் பயங்காட்டு!
இன்னும் திமிர்
ஏப்படி முளைக்கின்றது?
நுனியைக் கிள்ளு!
கிளைகளையும்
சயனைட் கத்தியால்
சீவு!
வேர்களின் மீது
சுடு நீரை ஊற்று !
சுவாசம் செல்லாமல்
கழுத்தை நெரி!

அடி வருடிகளையும்
வெப்பத்தில் போட்டு
வாட்டியெடு!
அவைகளின்
முளைக் காம்புகளில்
அசிற் ஊற்று!

ஏறக்குறைய
இப்போது
சடப் பொருள்
நிலைக்குக்
கொண்டுவந்தாச்சு.

அரைக்கம்பக்
கொடிகளை
முழுமைப்படுத்து!
ஒரு சாம்ராஜ்யம்
சாம்பலாகியதன்
ஞாபகார்த்தமாக,
அல்லது
வெல்லப்பட்டதாக!

(தினமுரசு — 19970907)



## நானும் மனிதன்.

உதிரத்தை
உப்பாக்கி,
உடம்பைச்
சாறு பிழிந்து
ஒவ்வொரு ரூபாயாய்
உழைத்த
பணம்
என்னிடம்
கொஞ்சம் உண்டு.

நண்பா வா!
உன்னிடம்
எவ்வளவு உண்டு?

இரண்டு பேரும்
ஆயுதம் விற்கும்
இடத்திற்குப் போவோம்!

கை நிறைய
வாங்குவோம்
ஏன்,
முதுகிலும்
இடுப்பிலும் கூடச்
சொருகுவோம்!

இப்போது வா!
இரண்டு பேரும்
மாறி மாறி
ஆளையாள்
யுத்தம் புரிவோம்!

நிச்சயம்
நம்மில் ஒருவர்
இறந்திருப்பர்...

எஞ்சிய ஆயுதங்களை
எதிரியிடம்
கொடுத்து
உன்னையே
சுடச் சொல்!

இப்போது
உன் ஆத்மா,
என் ஆத்மா,
எம் இனத்தின் ஆத்மா
எல்லாமே
சாந்தியடைந்திருக்கும.

(தினமுரசு — 19990523)

# நினைவு நாட்களான பண்டிகைகள்!

தைப் பொங்கல்
சித்திரை
தீபாவளி
என்று
வருடப்
'பிறப்புகள்'
இல்லை.

எல்லாம்
'இறப்புக்கள்' தான்.

தை மாதம்
'சுப்ப சொனிக்' கால்
கொட்டிவிட்டது
விழுந்து
அப்பாவும்;
சித்திரை மாதம்
'செல்' விழுந்து
அம்மாவும்
சொல்லாமல்
கொள்ளாமல்
சொந்தத்தை
விட்டனர்.

தைப்பொங்கல்
வந்தால்
அப்பா
நினைவு நாளும்,
சித்திரை
வந்தால்
அம்மா
நினைவு நாளும்
வரும்!

'ஒரு' வருடம்
பிறந்தால்
'இரு' இறப்புக்கள்
நினைவூட்டப்படும்.

எமது
வரவு செலவில்
பிறப்பே
துண்டு விழும்
தொகை!

(தினமுரசு – 19970615)



# கா (சா) வோலை.

அகதிக்
கொட்டில்களின்
இத்த
கிடுகின்
இடுக்குகளூடே
மரணத்தின்
வரவைப்
பார்த்துக் கொண்டிருந்த
சந்தர்ப்பம் அது.

காலடிச் சத்தங்கள்
மட்டும்
காதுக்குத் தெரிந்தது.
கண்ணுக்குக்
கேட்கவில்லை.

இதில்
முதல்
வெட்டப்படுவது
எது?

பல
கிழட்டோலைகளும்
ஒரு
குருத்தோலையும்
துந்தியிருந்தது.

பாதாதி
கேசமா?
கேசாதி
பாதமா?

ஒருவருக்குந்தான்
புரியவில்லை!

கதவிடுக்கால்
புகுந்த கத்தி
குருத்தோலையை
வெட்டியது...
பல
இழைத்தோலைகளைக்
கட்டுவதற்காக!

(தினமுரசு – 19971221)

## இரு கால் எருமைப்பட்டி.

இன்னும்
அணையவில்லை...
இராமாயணத்தில்
இலங்கை
தீப்பற்றி எரிந்தது -
உண்மையே!

வடகிழக்கில் மாத்திரம்
காய்ந்த
மனித விறகுகள்
இன்னமும்
எரிகின்றன!

எருமைப்பட்டிகள் போல்
ஆறுமணிக்கே
'படைப்' பட்டிக்காரர்கள்
அடைத்து விடுவார்கள்.
நகரவே முடியாது!
எங்கு பார்த்தாலும்
துவக்குக் கம்புகள்!

(மாட்டுக்) காலையை
ஏழு மணிக்கு
திறக்க வருவார்
படைப் போடியார்!

ஒவ்வொன்றாக
அடையாள அட்டையுடன்

வெளி வருவோம்.
"இரவு யார் வந்தது?"
'ப ளார்,' 'ப ளார்'...

"சத்தியமாக ஐயா!
நுளம்பைத் தவிர
வேறு மிருகங்கள்
வரவில்லை!"

(தினமுரசு – 19990411)



## கொ(ை)ல 'நீ'

பதினோராம்
கொலை 'நீ'
எனக்
கோணேஸ்வரி
பரிதவித்து
உயிர்விட்டாள்!

அந்தத் தாயிலும்
இருப்பிடம்
தேடி அழிக்கப்பட்டது.

நீ பிள்ளையே
பெறக் கூடாது
என்று
கிரனேட் பேசியது!

கணக்குகளிலும்
தடுமாற்றம்;
முன்னுக்குப் பின்
முரண்பாடுகள்!

நாலாம்
கொலை 'நீ'
என ஒன்றுக்கு
மேற்பட்டவர்களது
உயிர்களும்
உடமைகளும்
உயிர்வாழ்ந்த
நிலமும் கூட
துப்பாக்கி
ரவைகளால்
விழுங்கப்பட்டது!

பட்டியலில்
இன்னும்
கொலை 'நீ' கள்
பதியப்படலாம்
சமாதானம்
நீளுவதனால்!

(தினமுரசு – 19971123)

# ஆயுதக்குழந்தை!

மருத்துவிச்சி
தலையில்
கையை வைத்தவாறு
வெளியே வந்தாள்.

ஆவலோடு
கணவன் கேட்டான்,
"பிறந்தது
ஆணா? பெண்ணா?

"இப்படிப்
பார்த்தில்லை,
தலைவரும்
அல்லது
கால்வரும்
இது
இரண்டுமல்ல"

தாய்க்குத்
தலைப் பிரசவம்
ஆஸ்பத்திரியும்
அம்புலன்சும்
இங்கில்லை.
மரத்துக்குக்
கீழே
குந்தியிருந்து
கலங்கினான்
கணவன்!

மருத்துவிச்சு
வெளியே வந்தாள்.
"ஒரு 'துவக்குப்'
பிறந்திருக்கு"

அதிசயமாக
உள்ளே
நுழைந்தான்.
உண்மையாகவே
ஒரு துவக்கு!

பெருமூச்சு
விட்டான்,
"பிள்ளை
வயிற்றுக்காரி
அடிக்கடி
எதனைப்
பார்க்கிறாளோ
அப்படியே
பிள்ளை பிறக்கும்"
எங்கோ
வாசித்த ஞாபகம்.

(தினமுரசு – 19971214)



# பறிபோன தேகங்களும் தேசங்களும்

உணவுக்கு ஊறுகாயைப் போன்று
இரண்டாம் உலகப்போரில்
அமெரிக்க படைக்கு ஜப்பானியப் பேதைகள்.
உயிருடன் விட்டதால் ஒப்பாரி வைக்க முடிந்தது.

சதைத் துண்டுகளைக் கூட அணுவணுவாய்
ருசி பார்க்கும் நாய்களுக்கும் அப்படித்தான்.
துரத்திப் பிடித்து வெறி தீர்த்து.
கடித்துக் குதறி
காம ஊற்றுக்களைத் துளைத்து
நரம்புகளை அறுத்து
கற்புக்களை உறுஞ்சி
சினை முட்டைகளில் நின்று
முலை மார்பைப் பிய்த்து
அவைகள் எலியாகவும்
அதுகள் பூனையாகவும்.

மிருக சாம்ராஜ்யத்தைக் கட்டவிழ்த்து
துரத்தியும் பிடித்தும்
கிடத்தியும் இருத்தியும்
தமிழ்ச் சிவப்பணுக்கள் தேடப் படுகின்றன.

வழிவந்த ஆராய்ச்சிகள் நடாத்தி
முடியுங்கள்.
துரத்தியும் பிடித்தும்
கிடத்தியும் இருத்தியும்.

19970820

## ஏதாவது கொடுங்கள்.

அஞ்சி அஞ்சி
இதயம் சுருங்கி விட்டது -
இதயமில்லாதவர்களினால்!

மின்மினிப்
பூச்சுகள் கூட
நெருப்புக் கொள்ளிகளே!

துரும்பட்டி
விழும் சத்தங்கள் கூட
'அது' விழும்
சத்தம் போல
உயிர் நடுக்கம்!

ஏன் ஐயா!
என்ன-
கொடுமை செய்தோம்?
உயிருடன் வைத்தே
சித்திரவதைகள் ....?

குயில்கள் போல்
இனத்தைப் பெருக்க
காகத்தின் கூட்டுக்கா
போவது?

வயிற்றோடு
வாழ்க்கையுந்தான்
கேள்விக் -
குறியாகி விட்டது!

வேண்டும் ...
வெடித்து விடாத
இதயமும்
இடிந்து விழாத
கற்குகையும்!

**(தினமுரசு – 19971109)**



## நெருப்பான நினைவுகள்!

டயர்கள் எரிந்த
கரும்புகைகளின்
சுவாலைகளுடன்
ஆகாயத்தில்
கரைந்து போயின
பல இளைஞர்களின்
உயிர்கள்.

நாட்டுக்கு
உரமிட வேண்டிய
இள இரத்தங்கள்
துப்பாக்கி
வேட்டுக்கு
பலியாகி
மண்ணுக்கு
இரையாயின.

இரத்தினங்களை
ஈன்று தந்த
நித்திலம்
எலும்புக் கூடுகளை
அகழ்ந் தெடுக்க
வேண்டிய
கொடூரத்திற்கு
வளர்ச்சி கண்டுள்ளது.

முற்றத்து
மல்லிகைகள் கூட
மணக்கின்றது
பிணவாடையாக.

' மானிடரில்'
மிஞ்சியுள்ளது
'இடர்' மட்டுமே.
நாளை
என்ன நடக்கும்?
என்பது தெரியாது.
நேற்றைய
நாளை
நினைக்கும் போதே
நெஞ்சு வலிக்கிறது... !

**(19971211)**

## கொ (லை) ல றா!

துபீர்
துண்டு வீசிய
கையோடு
எம்மோடு
அகதி முகாமுக்குள்
குடியேறியது.

ஒருவர்
பாவித்த
பொருட்களை
இன்னொருவர்
பாவிக்கக் கூடாது.

உள்ளது
உண்ண ஒரு
றப்பர் கோப்பை (யும்)!
உறங்க ஒரு
பசளை உறை ( யும்)!

"தண்ணீரைச்
சுட வைத்துக்
குடியுங்கள்"
அரசின்
அறிவித்தல்.

ஏற்கனவே
கண்ணீர் வரை
சூடாக்கப்பட்டு விட்டது.

இருப்பது
போதாதென்று
உனது
கொலைப்
பயமுறுத்தல் வேறு.

(19971211)



## என்று முடியும்?

என்று முடியும்?
என்று கேட்டால்,
மழையா?
வெயிலா?
பனியா?
பசியா?

எல்லாமே
குறிப்பிட்ட காலத்தில்
முடிந்து விடும்.
முடிவுக்கும் வந்து விடும்.

முடியாததும்
முடிவுக்கு வராததும்
ஒன்றுண்டு.

சமாதானத்தை
ஜயசிக்குறு
பேசும் காலமிது.

துப்பாக்கிகளுடன்
துப்பாக்கிகளே
பேசும்.

தீர்வுத்திட்டமும்
பொதியும்
குலைக்கும் நாய்க்கு
இறைச்சித் துண்டு.

அதிலும்
இறைச்சி என்று
எலும்புகளின் கலப்படம்.

ஊமைக்கு
சைகையாலேயே
பதில் சொல்ல வேண்டும்.
வாய்ப்பேச்சு
இரண்டாம் பட்சம்.

வாய்பேச முடியாத
வலது குறைந்த நாட்டில்
குண்டு வெடிப்புச்
சத்தங்களை மட்டுமே
அவர்களால்
உணர முடியும்.

பாவம்
அதுவும் கேட்க வில்லை.
ஊமை என்பதால்
செவிடும் கூட
உள்ளதாம்.

'என்று முடியும்?'
என
கில்டன் கொட்டலில்
ஒரு
குண்டை வைத்துக்
கேளுங்கள்.

தீர்வுப் பொதிக்கு
ரீசுப் பேப்பர்கள்
ஒட்டப்படுகின்றன
என்ற பதில் வரும்.

(19971201)

## ஆட்டு லொறி.

ஆச்சி புறுபுறுத்தார்
"ஆட்டு -
லொறிகளெல்லாம்
வருத்தாமே
நம்மட
முகாமைக்கு."

இடம் பெயர்ந்ததில்
இரு மகனையும்
பொறி வெடியில்
புருசனையும்
இழந்த ஆச்சி.

"அகதி முகாமுக்கு
ஆடு வளர்ப்புத்
திட்டம்
கொண்டு வரப்
போறாங்க போல."

"ஆடா?
நாம் எல்லாம்
கறியாடுதானே!
நமது வளர்ப்பிடமும்
ஆட்டுக் கொட்டிலின்
அரைவாசிதானே!
இதற்கு ஆடு வேறு!"
இது இன்னொரு
கணவனை
இழந்த
கைம்பெண்ணின்
கருத்து.

உண்மைகள்
அந்த
அகதி முகாமுக்குக்
கிட்ட வில்லை.
அடுத்த கட்ட
நடவடிக்கைக்கான
'ஆட்லெறிகள்'
அவை என்று.

**(19971201)**



## இவைகள் இப்படி.

சேர்ந்தே இருப்பது
தமிழனும் அகதியும்.

சேரக் கூடாதது
யுத்தமும் சமாதானமும்.

காணக்கூடியது
எதிர் பாராத
எறிகணைத்
தாக்குதல்.

காணக் கூடாதது
பரமேஸ்வரி
கிருஷாந்திகளை.

கேட்கக் கூடியது
கிடுகும் மூங்கிலும்.

கேட்கக் கூடாதது
வவுனியாவிலிருந்து
வெளியேவர 'பாஸ்'.

நினைக்க வேண்டியது
மறதியை.

நினைக்கக் கூடாதது
வடகிழக்கு
வாழ்வை.

இறுதியாகச்
சொல்லக் கூடியது
சமாதானத்திற்காக
யுத்தம்!

**(19971105)**

## வெடி மழை.

நள்ளிரவு
பன்னிரெண்டு
மணியிருக்கும்.
பெரும் சத்தங்களுடன்
ஒளிக்கீற்றுக்கள்.

மேக முகாம்
தாக்கப்பட்டது.
மழை வெடிகள்
சோவென
பூமியை நோக்கி
சுடப்பட்டன.

காக்கை குருவிகள்
தமது கூடுகளில்
படுத்துறங்கிக்
கொண்டிருந்தன.
நாங்களும்
வீடுகளில் படுத்து
சரியான நித்திரை.

'தமிழ் அகதிகள்'
மட்டும்
விழித்துக் -
கொண்டிருந்தனர்
மரங்களின் கீழே!

**(19971022)**

# நாட்டு நடப்புக்கள்.

அழுது அழுது
நீர் வற்றி
உப்புக்கள் மாத்திரமே
புத்தளம் போல்
துவியல்களாக.

மூட்டைகள் போல்
முதுகில் மூட்டையுடன்
ஊர்ந்து திரிந்து
அகதி ரெத்தம் குடிக்கும்
பெண்களில் மட்டும்.

மரங்களின் கீழ்க் கூட
குடியிருக்க முடிய வில்லை
பறவைகள்
எச்சம் போடும் என்பதால்.

எட்டுக்கள்
அறுபத்து நான்கானது
ஒரே வீட்டில்
இறந்தவர்கள்
எட்டுப் பேர்
என்பதால்
மது போதையில்
மட்டக்களப்பில்.

தட்டுத்தடுமாறி
எடுத்தான்
தம்பி விக்கட் பொல்லை
இன்று கொழும்பில்
கிரிக்கட் மெச்சாம்.

(19970906)

# பறவை இட்ட முட்டை

சாப்பிடக் கூட
"வாய் திறக்க"
அஞ்சப்பட்டது.

சட்டமன்றக்
கூட்டத் தொடர்
யாவும்
அங்கத்தவர்களின்
அஞ்சலிக்
கூட்டத்தின்
பின்பு
கலைக்கப்பட்டது.

விரைவாக
தமது தலைகளில்
மூட்டை
முடிச்சுகளைத்
தாங்கிய வண்ணம்
இடம் பெயர்ந்து
விரைந்து
கொண்டிருந்தன
எறும்புகள்.

முட்டையை இட்ட
கோழிக்கோ
அச்சம்
இது
தன்னுடையது தானா?
என்று.

ஏனெனில்
நேற்றுப் போட்ட
"முட்டையில்"
எஞ்சியது
கோழி மட்டும்தான் !

(இன்னும் நாங்கள் –19970727)



# மாண்டுள்ள மீட்பர்கள்.

இன்னுமொரு முறை
உயிர்த்தெழ
வேண்டும்.
இல்லாவிட்டால்
நாங்கள்
உம்மைப்போல்
அறையப்பட்டு
விடுவோம்.
சிலுவைகளிலல்ல,
தெருப் போஸ்ற்றுகளில்.

மக்களின் பாவத்திற்காக
சிலுவை சுமந்த
கோமகனே!
நாம்
மண்ணில் பிறந்த
பாவத்திற்காக
மண் மூடைகள்
அல்லவா
சுமக்கின்றோம்.

உம்மைப்போல்
நானும்
உயிர்த்தெழலாம்
என்று
எரித்த பின்பே
கொல்கின்றனர்.

பிதாவே,
இனியும் பிறக்காதே!
நாம் இறக்கும் வரை!
இல்லாவிட்டால்
நீ எழுதி வைப்பாய்
எம்மை யெல்லாம்
ஏசு பிரான்கள்
என்று.

(19971208)

## வுச்சர்.

வேலை வாய்ப்பு வேண்டுமா?
போ, . . .
உன் உயரத்தையும்
மார்பு அகலத்தையும்
அள, . . .

மூன்று நாட்களின் பின்
ஒரு இரும்புக்கோலும்
சிறு செம்புத்துண்டுகளும்
தருவார்கள்.

இரண்டு கால்
ஒரு தலையுள்ள
'தமிழ் பேசும்'
மிருகங்களைச்
சுடப் பழகு.

அப்போது
கோப்ரல், கேணல்
பதக்கமும் கிடைக்கும்.

சம்பளமும் மாதா மாதம்
வீட்டுக்கே
அனுப்பப்படும்.
இறந்தாலும்
ஊதியம் கிடைப்பது
இதிலொன்றில் தான்!

நல்ல தொழில்
கை நிறைய வருமானம்.

நாளை நீயுமொரு
நாடுபிடித்த வீரனைப்
பிடித்த
நாடு காத்த வீரனாவாய், . . .

**(19970819)**



## மனிதம்.

மாறவேண்டும்.
ஒரு
தொப்பியணியும்
மனிதனாகவோ
அல்லது
காவியுடை
சுற்றிய
ஒரு
மனிதனாகவோ
நான்
மாற வேண்டும்.

வெள்ளை வேட்டி
அணிந்து
என்னால்
உலவ முடியவில்லை.
அடையாள
அட்டைகள்
ஒட்டியிருந்தும்
இன்னும்
அடையாளங்களை
நிரூபிக்க
முடியாதுள்ளது.

சப்பாத்துக்
காலடிகளைக்
கண்டாலே
சர்ப்பம்
தீண்டியது போல்
நடுக்கம்.
எனது எத்தனை
அண்ணன்மார்,
அப்பாவைக்கூடத்
தின்றுவிட்டதே!

மரண
இரவுகளைத் தாண்டி
பொழுது விடியும்.
இரவு
வீதியில் விழுந்த
எறிகணை
வீட்டில்
விழுந்திருந்தால்,
எம்குடும்பம்
எமலோகத்தில்.

நான்
மாறவேண்டும்.
ஒரு
தொப்பியணியும்
மனிதனாகவோ.
அல்லது
காவியுடை
சுற்றிய
ஒரு
மனிதனாகவோ.

எனக்கும்
மற்ற மனிதர்களைப் போல்
பகலில் நடமாடவும்
இரவில் நிம்மதியாய்
உறங்கவும்
இலட்சியம்
உள்ளது.

இதற்கு இந்த
வெள்ளை வேட்டியும்
நெசனலும்
தடையாக
இருக்குமானால்
நான்
அவைகளை
ஒரு
சாறமாகவோ
அல்லது
காவியுடையாகவோ
கட்டாயம்
மாற்ற வேண்டும்.

அப்போது தான்
என் பெயர் சொல்ல
எனக்கு
வாரிசு இருக்கும்.

எனவே
நான்
மாற வேண்டும்.

(19971202)



அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் மாரிமுத்து யோகராஜன் வளர்ந்து வரும் ஒரு கவிஞன். இவர் 1992ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடித்த சில கவிதைகள் இத் தொகுப்பில் இடம் பெறுகின்றன.

சிட்டுக்குருவிக்கு ஒரு வரைபடத்தைக் கீறிக்காட்டி அதற்கேற்ப பறக்கவேண்டுமென உத்தரவு போட யாருக்கும் உரிமையில்லை.

புதிதாகப் பாட வந்திருக்கும் இந்தக் குயிலுக்கு நாம் வாழ்த்துப் பாடுவோம். அருமை நண்பர் திரு. செ. யோகராசா கூறுவதைப் போல கவிதைகளின் மொழிமொழிக்குப் பின்னான மௌனம், நளினம், செறிவு, என்பனவற்றில் கவனம் செலுத்தி இக்குயில் வருங்காலத்தில் பறக்க ஆசிப்போம்.

சோலைக்கிளி

10. 10. 1999

செலக்ஷன் ஓப்செற் பிரிண்டர்ஸ் - அக்கரைப்பற்று.